www.Padasalai.Net www.CBSEtips.in

Tsi9T

## தென்காசி மாவட்டம்
## முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

08-08-2023 வகுப்பு 9

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 50

**அ) உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2) தமிழ்விடுதூது ............. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

3) **விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக:**

i) ............. இனம் ii) வண்ணம் .............
iii) ............. குணம் iv) வனப்பு .............

அ) மூன்று, நூறு, பத்து, எட்டு ஆ) எட்டு, நூறு, பத்து, மூன்று
இ) பத்து, நூறு, எட்டு, மூன்று ஈ) நூறு, பத்து, எட்டு, மூன்று

4) **பொருத்தமான வினையை எடுத்து எழுதுக:**

கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக .............
அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் .............

அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

5) "மிசை" - என்பதன் எதிர்ச்சொல் என்ன?

அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

6) 'அவன் திருந்தினான்' எவ்வகைத் தொடர்?

அ) செய்வினைத் தொடர் ஆ) வினாத் தொடர்
இ) தன்வினைத் தொடர் ஈ) பிறவினைத் தொடர்

**பாடலைப் படித்து விடை தருக:**

"எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே......"

7) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்?

அ) பிங்கல நிகண்டு ஆ) தமிழோவியம்
இ) தமிழ்விடுதூது ஈ) வணக்கம் வள்ளுவ

8) இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) குடபுலவியனார் ஆ) சேக்கிழார்
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) கால்டுவெல்

**ஆ) எவையேனும் ஆறனுக்கு விடை தருக:** **6×2=12**

9) நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?

10) "அகமாய் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்" - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?

11) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



12) கூவல் என்று அழைக்கப்படுவது எது?

13) நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

14) வீணையோடு வந்தாள், கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.

15) **பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக:**

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) ................. மொழியாகும்.

ஆ) காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) ................ மொழி தமிழ்.

16) **கலைச்சொல் தருக:**

அ) Lexicon

ஆ) Irrigation Technology

**இ) எவையேனும் நான்கனுக்கு விடை தருக: (17 - கட்டாய வினா) 4×3=12**

17) **அடிமாறாமல் எழுதுக:**

'தித்திக்கும் தெள்ளமுதாய்' எனத் தொடங்கும் பாடல்

**(அல்லது)**

'காடெல்லாம் கழைக்கரும்பு' எனத் தொடங்கும் பாடல்

18) மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?

19) 'புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்' - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

20) அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

21) நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?

22) தன்வினை, பிறவினை - எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்தி எழுதுக.

**ஈ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: 2×5=10**

23) அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

24) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**உ) விரிவான விடையளிக்க: 1×8=8**

25) நீரின்று அமையாது உலகு - என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

**(அல்லது)**

'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com